**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.111** **நாள்: 09.08.2018**

**குடற்புழு நீக்க நாள் (10.08.2018) முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து அங்கன்வாடி மையங்கள், மாநகராட்சி பள்ளிகள், அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 19 வயதிற்குட்பட்ட 15,98,078 குழந்தைகள் மற்றும் மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் 10.08.2018 அன்று வழங்கப்பட உள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் நாடு தழுவிய குடற்புழு நீக்க நாள் (10.08.2018) நாளை கடைப்பிடிக்கப்படுவதால், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து சென்னை ஆரம்ப சுகாதார மையங்கள், மாநகராட்சி பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (ICDS-)தின் கீழ் இயங்கும் அங்கன்வாடி மையங்களிலும் குடற்புழு நீக்க மாத்திரை (அல்பெண்டசோல்) நாளை (10.08.2018) அன்று வழங்கப்பட உள்ளது. மேலும், விடுபட்ட குழந்தைகளுக்கு 17.08.2018 அன்று வழங்கப்பட உள்ளது.

குடற்புழு நீக்க நாள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, பள்ளித் தலைமை ஆசிரியர்கள், அனைத்து ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், பள்ளி நிர்வாக குழுவினர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக அங்கத்தினர்களுக்கு குடற்புழு நீக்க மருந்து பற்றியும், குடற்புழு நீக்க நாள் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றியும் மருத்துவ சேவைகள் துறை அலுவலர்களால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இதனால் பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 இலட்சத்து 98 ஆயிரத்து 78 குழந்தைகள் பயனடைவார்கள். மேலும் 1 முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ½ மாத்திரை (200 மி.கி.) மற்றும் 2 முதல் 19 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 1 அல்பெண்டசோல் (400 மி.கி) மாத்திரை அளிப்பதன் மூலம் குழந்தைகளின் ஆரோக்கியம் மேம்படுவதுடன் ஊட்டச்சத்து குறைபாடு இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்வதற்கும், கல்வித்திறன் அதிகரிக்கவும் உதவுகிறது.

எனவே, அனைத்து பெற்றோர்களும் தங்களது குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரையை அருகிலுள்ள ஆரம்ப சுகாதார மையங்கள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் தங்கள் குழந்தைகள் பயிலும் பள்ளிகள் ஆகிய இடங்களில் பெற்று பயன்பெறவும், வளமான இளைய சமுதாயத்தை உருவாக்கவும், முழு ஒத்துழைப்பு வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சியால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**